# குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் இஸ்லாமிய அறிவுநிலையும் அதன் செல்வாக்கும்: தோப்பூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

## The Islamic Knowledge of Parents in Child Rearing and It's Influence: Study Based on Thoppur Area

A.K. Siyana[1] & M.H.M. Nairoos[2]

[1]Assistant Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2] Senior Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
siyana@seu.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

குழந்தைகளை சிறப்பான முறையில் வழிநடத்தக்கூடியவர்கள் பெற்றோர்களாகும். பெற்றோர்கள் இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பில் சிறப்பான அறிவு மட்டத்தை கொண்டிருப்பதென்பது மிக முக்கியமான விடயமாகும். இந்தவகையில் தோப்பூர் பிரதேச முஸ்லிம் பெற்றோர்கள் எம்மட்டத்தில் இஸ்லாம் தொடர்பான அறிவை கொண்டுள்ளனர் மற்றும் குழந்தை வளர்ப்பில் அதனுடைய செல்வாக்கு எத்தகையது என்பதனை கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அளவு ரீதியான ஆய்வாக தோப்பூர் பிரதேசத்தின் உபபிரிவுகளான நான்கு கிராமசேவக பிரிவுகளை உள்ளடக்கி அங்குள்ள மொத்த பெற்றோர்களில் குறிப்பிட்ட 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அளவியல் வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.இதன் பிரதான கண்டறிதலாக இஸ்லாமிய முறைப்படி குழந்தை வளர்க்கப்பட வேண்டும் என்பதை அறிந்து வைத்துள்ளதுடன் அவர்களில் சிலர் மாத்திரமே இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு நடைமுறைகளை முழுமையாக பின்பற்றியுள்ளனர். ஏனையவர்கள் இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பாக அறிந்து இருந்தும் கூட அதனை நிறைவேற்றுவதனை விட்டும் விலகிக் காணப்படுகின்றனர். குழந்தை வளர்ப்பு தொடர்பான இஸ்லாமிய நடைமுறைகளை அன்றாட வாழ்வில் குழந்தைகளுக்கு பழக்கப்படுத்துவதை குறைந்தளவான பெற்றோர்களே பின்பற்றுகின்றனர். அதிகமான பெற்றோர்கள் முழுஅளவில் பின்பற்றுவதை விட்டும் விலகி வீணான பொழுதுபோக்குகளில் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் ஈடுபடுத்துவதனையும் கண்டறிய முடிந்தது. இவ்வாறான வழிகாட்டுதல்களின் விளைவுகளால் குழந்தைகள் மத்தியில் தவறான நடத்தைகள் செல்வாக்குச் செலுத்தியுள்மையை கண்டறிய முடிந்தது. இதன் விளைவால் குழந்தைகள் மத்தியில் பல விரும்பத்தகாத சில இஸ்லாமிய நடைமுறைகளுக்கு எதிரான பல விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் இவை பெற்றோர்களின் கவனக்குறைவால் ஏற்பட்ட முக்கிய எதிர்வினையாகவும் கொள்ளப்படுகின்றது. இவற்றை பெற்றோர்கள் சீரமைத்து குழந்தைகளின் எதிர்காலத்தை செப்பனிட வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்தும் வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்:** குழந்தை வளர்ப்பு, பெற்றோர்கள், அறிவு, தோப்பூர்

## 1. அறிமுகம்

குடும்பம் என்பது இரத்த உறவின்மூலம் உருவாகும் ஒரு சமூக நிறுவனமாகும். இத்தகைய குடும்பங்களின் ஒட்டுமொத்தமே இன்று எம்மைச் சுற்றியுள்ள சமூகமாக காணப்படுகின்றது. இந்த சமூகத்தை நாளை அலங்கரிக்க இருப்பது குழந்தை செல்வங்களாகும். குழந்தைகள் சமூகத்திற்கு சிறப்பாக ஒப்படைக்கப்படவேண்டுமாயின் இவர்களது குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரையிலும் அணுவணுவாக செதுக்கப்பட வேண்டும். இஸ்லாம் ஒரு மனிதன் கருவில் உருவாகியது முதல் அவன் கல்லறை செல்லும் வரையில் அவனுக்கான அனைத்து வழிகாட்டல்களையும் அழகிய முன்மாதிரிகளானஅல்குர்ஆன்,ஸுன்னா மூலமாகவும் மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளது. இதனை முதலில் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டியதுடன் அவர்களுடைய குழந்தைகளும் அதன் வழியில் வளர்க்கப்பட வேண்டும் என்ற பின்னணியில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.இன்று குழந்தைகளுக்கு பல்வேறுபட்ட வழிகளில் இஸ்லாமிய அறிவுடன் சார்ந்த வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை குடும்பங்கள், பாடசாலைகள், சகபாடிகள், உறவினர்கள், சமூகஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் போன்றவற்றின் மூலமாக பெறக்கூடியதாக உள்ளன. ஆனால் இக்குழந்தைகளை சிறப்பான முறையில் வழிநடத்தக்கூடிய பெற்றோர்கள் எந்தளவில் இஸ்லாமிய கல்வி தொடர்பான அறிவை கொண்டுள்ளனர். இவர்களது அறிவினுடைய தாக்கமானது குழந்தைகளின் அறிவிலும் நடத்தையிலும் எந்தளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. என்பதனை கண்டறிதல் இவ்வாய்வின் இலக்காகவுள்ளது. இலங்கையின் கல்வித் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் சமயம் சார்ந்த பாடத்திட்டங்கள் அமையப்பெற்றுள்ளன. இருந்த போதிலும் பெற்றோர்கள் அவர்களது குழந்தை வளர்ப்பில் இஸ்லாமிய நடைமுறைகளை பின்பற்றி நடத்துகின்றனரா? குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் இஸ்லாமிய அறிவு பூரணப்படுத்தப்படுகின்றதா? இந்நிலைமை தோப்பூர் பிரதேசத்திலும் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றதா? என்பதனைக் ஆய்வுக்குட்படுத்துவது அவசியமாகும். காரணம் இன்று அதிகமான குழந்தைகள் தவறான நடத்தைகள், போதைப் பொருள் பாவனை, இஸ்லாம் அங்கிகரிக்காத தவறான காதல் தொடர்புகள், மாற்றுமதத் திருமணங்கள், அதிகரித்த தொலைபேசிப் பாவனை, கல்வியில் ஆர்வமின்மை, அதிகமான நேரம் திரைப்படங்கள் பார்த்தல், தொடர்நாடகங்கள் பார்த்தல், இசைகேட்டல், தகாத நண்பர்கள் தொடர்பு, பெற்றோர்களுக்கு கீழ்படியாமை, மூத்தோரை மதிக்காமை, திருடுதல், பொய், பிடிவாதம் போன்ற இன்னும் பல தவறான நடத்தைகளை பிரதிபலிக்கின்றனர்.(கள ஆய்வு, 2020). பெற்றோர்கள் குழந்தைகள் சிறந்த தொழில் வாய்ப்பை பெற வேண்டும் அதற்கான கல்வியினை திறம்பட முன்னேற்ற வேண்டும் என்பதில் அதிக படியாக அக்கறை செலுத்துகின்றனர். இதனால் இஸ்லாமிய அறிவினை குழந்தைகளுக்கு வழங்குவதிலும், குழந்தைகள் இஸ்லாத்தினை முழுமையான அளவில் நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில்குழந்தைகளை வளர்த்தெடுப்பதிலும் அதிக அக்கறை காட்டவில்லை இதனால் குழந்தைகள் மத்தியில் அதிகளவான பிரச்சினைகள், இஸ்லாத்திற்கு முரனான தவறான நடத்தைகள் தென்படுகின்றன. எனவே இவற்றை இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. எனவே முஸ்லிம் பெற்றோர்கள் அவர்களது

குழந்தைகளை சிறப்பாக வளர்க்க வேண்டும். இஸ்லாமிய அறிவுடனும், இஸ்லாமிய நடைமுறைகளைப் பேணும் வகையில் குழந்தைகள் வளர்க்கப்படுகின்றபோதுதான் குழந்தைகள் ஸாலிஹான குழந்தைகளாக உருவாகுவார்கள். எனவே இஸ்லாமிய குழந்தை வளர்ப்பின் முக்கியத்துவத்தினை பெற்றோர்களுக்கு தெளிவு படுத்தும் வகையிலும்,இவ்வாய்வு பிரதேசத்தில் குழந்தை, குடும்பவியல் தொடர்பானஎவ்விதமான ஆய்வுகளும் ஆய்வில் நிலவும் இடைவெளியை நிவர்த்திக்கும் வகையில் இப்பிரதேசத்தில் காணப்படும் குழந்தை வளர்ப்பு தொடர்பான பிரச்சினை தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் இங்குள்ள ஒவ்வொரு பெற்றோரும் பேதியளவான இஸ்லாமிய அறிவு பெற்றவராக திகழ வேண்டும் எனும் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வு காணப்படுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

தோப்பூர் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் குடும்பங்களிடம் இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு நடைமுறைகள் தொடர்பான அறிவு எம்மட்டத்தில் காணப்படுகின்றது என்பதனையும் அது எவ்வாறு குழந்தை வளர்ப்பில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனைக் கண்டறிதல்.

## 3. இலக்கிய மீளாய்வு

பாத்திமா மின்சரா, கே., மஸாஹிர், எஸ்.எம்.எம்.,(2015) முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி வளர்ச்சி: எலமல் பொத பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு எனும் தலைப்பிலுள்ள ஆய்வில் 1929 காலப்பகுதிகளில் பெண்களின் தமிழ் பாடசாலைக் கல்வியுடன் மத்ரசாக் கல்வி முறைகளையும் பெற்றுக் கொள்ளப்பட்டது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அரபு, தமிழ் மொழி நூல்களை விரும்பி மாணவர்கள் படிப்பதாகவும் இஸ்லாமிய கல்வி சார்ந்த பாடசாலைக் கல்விக்கு ஆர்வம் மாணவர்களிடம் காணப்பட்டமையானது இவர்களின் பாடசாலைக் கல்வியில் ஆர்வம் செலுத்துவதைத் தூண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. James.l.hoot, Tunde Szecs, Sameera moosa (2003) What Teachers Of young Children should know about Islam.என்ற ஆய்வு குழந்தைகளுக்கான கற்பித்தல் முறைகளை ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்துவதனை நோக்கமாக கொண்டுள்ளது. இதிலிருந்து இஸ்லாம் பற்றியும், முஸ்லிம் குழந்தைகள் பற்றியும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு இஸ்லாத்தின் பூரணமான தகவல்கள் பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டிய விடயங்கள் குறித்து தனித்தனி தலைப்புகளில் பேசப்பட்டுள்ளமையானது இந்த ஆய்விற்கு இஸ்லாமிய அறிவின் முக்கியத்துவம் பற்றி அறிய முடிந்தது.Litana borhan (2004) Teaching Islam: A look inside & Islamic preschool in Malaysia.எனும் ஆய்வின் மூலமாக மலேசிய மக்கள் குழந்தைகளுக்கு தேசிய ரீதியிலான கல்வியை அதிகம் ஊட்ட விரும்புகிறார்களா? இல்லை தனிப்பட்ட மதம் சார்ந்த கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகிறார்களா? என்பதனை நோக்காக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுள்ளது.

## 4. ஆய்வு முறை

இவ்வாய்வானது அளவு ரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலிருந்து 16 கி.மீ தொலைவிலுள்ள கிராமம் தோப்பூராகும். இக்கிராமம் 39.9 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இவற்றில் தோப்பூர் பிரதேசத்திலிருந்து சனத்தொகை காரணமாக பிரிந்த தோப்பூர் (216), பாலத்தோப்பூர் (216C), அல்லை நகர் கிழக்கு (216A), அல்லை நகர் மேற்கு (216E) எனும் நான்கு கிராமசேவகப் பிரவுகளை மாத்திரம் உள்ளடக்கியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நான்கு பிரதேசங்களில் 2296 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களின் சனத்தொகை 7833 எண்ணிக்கையாக காணப்படுகிறது. அந்த வகையில் இவ்வாய்வுக்கு 200 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடம் பெறப்பட்ட தரவானது, அளவியல் வினாக்கொத்து மூலமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. அவர்களில் குழந்தைகளையுடைய (20–60) வயதிற்குறப்பட்ட பெற்றோர்களிடம் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தொழில் ரீதியான வேறுபாடு(வியாபாரம், விவசாயம், அரச உத்தியோகத்தர், சுயதொழில்) கல்வித்தகைமை ஆகியவை மாதிரித் தெரிவில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் தகவல்கள் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 5. கலந்துரையாடல்களும் கண்டறிதல்களும்

### 5.1. தகவல் தருனர்களின் பால் அடிப்படையிலான விபரம்

தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட வீதங்களில் வினாக்கொத்தானது வழங்கப்பட்டது. அவற்றின் தகவல் தருனர்களின் பால்ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும்போது ஆண்கள் 90 பேரும், பெண்கள் 110 பேருமாக காணப்படுகின்றனர். தோப்பூர் பிரதேசத்தில் மொத்த சனத்தொகையில் ஆண்களைவிட பெண்களே சற்று அதிகமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஆண்கள் - 3898, பெண்கள் - 3935) இதற்கமைய தகவல் தருனர்களில் பெண்களின் வீதம் சற்று அதிகமாகக் காணப்படுகின்றது.

### 5.2 தகவல் தருனர்களின் வயதடிப்படையிலான விபரம்

தகவல் தருனர்களில் பெரும்பான்மையானோர் 41 வயதிற்கும் 50 இற்கும் இடைப்பட்டோர் ஆவர். இவர்கள் 39% மாகக் காணப்படுகின்றனர். அதிலும் 31 வயதிற்கும் 40 இற்கும் இடைப்பட்டோர் 36% மாக காணப்படுகின்றனர். இவ்விரு வயதிற்கும் இடைப்பட்டவர்களே தகவல் தருனர்களில் அதிகமாக உள்ளனர்.

### 5.3 கல்வித்தகைமை தொடர்பான விபரம்

கல்வித்தகைமை அடிப்படையில் நோக்குகையில் தகவல் தருனர்களில் அதிகமானோர் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்றவர்களாக 124 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 62% கொண்டோர் ஆவர். முறைசார் கல்வியைப் பெறாதவர்களாக 22 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 11% கொண்டோர் ஆவர். உயர் தரக் கல்வியைப்

பெற்றவர்களாக 30 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 15% கொண்டோர் ஆவர். மார்க்கக் கல்வி 8 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 4% கொண்டோர் ஆவர். பல்கலைக்கழகக் கல்வி 10 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 05% கொண்டோர் ஆவர். தொழிற் தகைமைக் கல்வி 06 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 03% கொண்டோர் ஆவர். முறைசார் கல்வியை பெறாதவர்களும் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்றவர்கள் 146 பேர் காணப்படுகின்றனர். மொத்த தகவல் தரும் பெற்றோர்களில் இவர்கள் 73% மாக காணப்படுகின்றனர். மேலும் இவர்களது குழந்தை வளர்ப்பு தொடர்பான அறிவினை கல்வியுடன் தொடர்புப்படுத்தி நோக்கும்போது இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பான முழுமையான அறிவை கல்வி மூலமாக பெறவில்லை. மாறாக இவர்களிடம் அறிவியல் ஆய்வின் மூலம் பெற்ற தரவின்படி இவர்களில் குழந்தை வளர்ப்பு தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றவர்களாக 128 பேர் காணப்படுகின்றனர். இவர்கள் மொத்த தகவல் தருனர்களில் 64% மாக காணப்படுகின்றனர். தகவல் தருனர்களில் 72 பேர் எவ்விதமான குழந்தை வளர்ப்புத் தொடர்பாக ஆலோசனைகளையும் பெறவில்லை. இவர்கள் மொத்த தகவல் தருனர்களில் 36% மாக காணப்படுகின்றனர்.

### 5.4 தகவல் தருனர்களின் தொழில் விபரம்

தகவல் தருனர்களின் விபரங்களின்படி தொழில் ரீதியாக நோக்குகின்ற போது ஒவ்வொரு குடும்பமும் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் வழிமுறைகளில் 60% மான பெற்றோர்கள் வியாபாரத்திலும் கணிசமான அளவில் அரச உத்தியோகத்தர்களாகவும் காணப்படுகின்றர். தொழில் அற்றோர் வீதம் 1% மாகவே காணப்படுகின்றது. காரணம் இவர்கள் விதவைத் தாய்மார்களாக உள்ளதுடன் உறவினர்களின் உதவி மூலமாக வாழ்வாதாரத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

### 5.5 குழந்தை வளர்ப்பு பற்றிய அறிவு தொடர்பான விபரங்கள்

குழந்தைகளை பெற்றெடுப்பதினால் இந்த உலகத்தில் இன்னும் ஏராளமான நன்மைகள் ஏற்படுகிறன. மறுமையிலும் பெற்றோர்கள் நன்றாக வாழ்வதற்கும், இன்பத்தை அனுபவிப்பதற்கும் நல்ல குழந்தைகள் காரணமாக அமைகின்றன. எனவே இந்த பாக்கியத்தை அல்லாஹ்விடம் கேட்க வேண்டியதுடன் அந்த குழந்தைக்காக வேண்டி பிரார்த்திக்க வேண்டும். குழந்தை வளர்ப்பு தொடர்பான அறிவினை குழந்தையினை இவ்வுலகில் பெற்றுக் கொள்வதற்கு முன்பே இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு முறைகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியதுடன் அது தொடர்பான ஆலோசனைகளையும் ஒவ்வொரு பெற்றோரும் அவசியம் பெற்றுக் கொள்ள வேண்டும். இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பான உளவளத்துணை ஆலோசனைகளை தகவல் தருனர்களில் இருந்து எவரும் தனிப்பட்ட வகையில் பெற்றுக் கொள்ள வில்லை. மாறாக இவர்களில் 94% மானவர்கள் இவ் உளவளத்துணை அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். 6% மானவர்கள்இஸ்லாமிய ரீதியிலான உளவளத்துணை தொடர்பான எவ்விதமும் அறியாதவர்களாக காணப்படுகின்றனர்.

மேலும் 100% ஆனவர்கள் ஸாலிஹான குழந்தைக்காக வேண்டி திருமணத்தின் பின் பிராத்தித்தவர்களாகவும் அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.


**அட்டவணை : 5.5.1 தகவல் தருனரின் குழந்தை வளர்ப்பு தொடர்பான விபரம்**

| குழந்தை வளர்ப்பு தொடர்பான விபரம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| குழந்தை வளர்ப்பிற்கு உளவளத்துணை அவசியம் | 188 | 94% |
| குழந்தை வளர்பிற்கு உளவளத்துணை பற்றி அறியாதவர்கள் | 12 | 6% |
| உளவளத்துணை மற்றும் ஏனையவர்களிடம் ஆலோசனைகள் பெற்றவர்கள் | 128 | 64% |
| உளவளத்துணை மற்றும் எவரிடமும் ஆலோசனைகள் பெறாதவர்கள் | 72 | 31% |
| ஸாலிஹான குழந்தைகளை வேண்டிப் பிரார்த்தித்தவர்கள் | 200 | 100% |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

அட்டவணை : 1 இன் தகவல் தருனரின் குழந்தை வளர்ப்பு தொடர்பான விபரங்களின் தரவிற்கு அமைய 64% ஆனவர்களே குழந்தை வளர்ப்பு தொடர்பு தொடர்பாக உளவளத்துணை மற்றும் ஏனையவர்களிடம் ஆலோசனைகள் பெற்றவர்களாக உள்ளனர். குழந்தை வளர்ப்புத் தொடர்பான அறிவினை பெற்றுக் கொண்ட முறைகளை நோக்குகின்றபோது தகவல் தருனர்கள் 20% ஆனவர்கள் வானொலியில் நிகழ்த்தப்படுகின்ற இஸ்லாமிய குழந்தை வளர்ப்புத் தொடர்பான வளவாளர்களின் மூலம் இடம்பெறுகின்ற நிகழ்சி மூலமாக பெற்றுக் கொண்டதாகவும், ஏனையவர்களின் விபரங்களை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

**வரைபடம்: 5.5.2குழந்தை வளர்ப்புத் தொடர்பான அறிவினை பெற்றுக் கொண்ட முறைகள் பற்றிய விபரம்**





**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

### 5.6 குழந்தைகள் மீதான பெற்றோர்களின் செல்வாக்கும் அதன் எதிர்வினைகளும்

ஆய்வுப்பிரதேசத்தில் அல்குர்ஆனையும், ஏனைய கல்வியையும் தேடிக் கற்றுக்கொள்ள வேண்டிய மாணவர்கள், மேலதிக வகுப்பிற்காக அல்குர்ஆன் வகுப்புக்களை நிறுத்திக் கொள்கின்றனர். மேலதிக வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டதன் பின்பு குறிப்பிடத்தக்க குழந்தைகள் இந்த நேரத்தினை திரைப்படங்கள், தொடர்நாடகங்களைப் பார்ப்பதற்கும் மேலும் பெற்றோர்களுக்கு கீழ் படியாத நிலையினையும் இவைகள் உருவாக்கி விடுகின்றது. பெற்றோர்களின் பார்வையில் இருந்து தப்பிக்கின்ற ஆண்குழந்தைகள் போதைப் பொருள் பாவனை, திருடுதல் என்பதனை பழக்கப்படுத்திக் கொள்வதுடன் இவர்கள் கல்வியில் அக்கரையற்றவர்களாகவும் மாறுகின்ற சூழ்நிலையை அவதானிக்க முடிகின்றது. வீட்டுச் சூழல் காரணிகளை நோக்குமிடத்து குழந்தைகள் இரவில் நேரகாலத்தில் தூங்கி, அதிகாலையில் விழிக்காமை, தொலைக்காட்சியில் (குடும்பங்களுடன் இணைந்து) திரைப்படம், தொடர்நாடகங்கள் பார்த்தல், இணையத்தள விளையாட்டுக்கள், தொழுகைவிடயத்தில் வீட்டில் கவனக் குறைவாகயிருத்தல் போன்ற வீட்டுச் சூழல் காரணிகள் குழந்தைகளின் அன்றாட நடத்தைகளில் தாக்கம் செலுத்துகின்றன.

**வரைபு 5.5.3குழந்தைகளின் வீட்டுச்சூழல் தொடர்பான விபரம்**




**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

### 6. முடிவுரை

இந்தவகையில் இவர்கள் மத்தியில் குழந்தை வளர்ப்பு பற்றி கூறப்படும் அனைத்து இஸ்லாமிய நடைமுறை தொடர்பான அறிவு இப்பிரதேச எல்லாப் பெற்றோர்களிடமும் காணமுடியாதுள்ளது. அதிலும் தகவல் தருனர்களில் 50 – 60 வயதிற்கு இடைப்பட்டவர்கள் இதன் முழுமையான நடைமுறைசார் அறிவு அற்றவர்களாக காணப்படுவதுடன், அவர்கள் அவர்களின் பெற்றோர்கள் காட்டித்தந்த வழிமுறைகளை மாத்திரம் பயன்படுத்தி குழந்தை வளர்ப்பை மேற்கொண்டுள்ளனர். அவர்களில் சிலர் மாத்திரமே இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு நடைமுறைகளை முழுமையாக பின்பற்றியுள்ளனர். ஏனையவர்கள் இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பாக அறிந்து இருந்தும் கூட அதனை நிறைவேற்றுவதனை விட்டும் விலகிக் காணப்படுகின்றனர். இதில் இன்னும் சிலர் தமது குழந்தை வளர்ப்பில் இஸ்லாமிய சுன்னத்தான நடைமுறைகளை ஆடம்பரமாக மேற்கொள்கின்றனர், அதிலும் இஸ்லாம் காட்டித்தராத புதிய முறையான குழந்தை பிறப்புக் கொண்டாட்டங்களையும்

மேற்கொள்கின்றனர்.குழந்தை வளர்ப்பு தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்கள் அனைத்தையும்(பயான் நிகழ்ச்சிகள், மக்தப் பயிற்சி நெறிகள், உலமாக்களின் வழிகாட்டல்கள், ஜமாஆத் பயணங்கள், இஸ்லாமிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் இஸ்லாமிய வானொலி நிகழ்ச்சிகள் மூலமாக இஸ்லாமிய நடைமுறைகளை அறிந்து கொண்டுள்ளனர். இன்னும் குறிப்பிட்ட சிலர் எவ்விதமான ஆலோசனைகளையும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வாறாக முறைசார், முறைசாரா வழிமுறைகள் ஆய்வு பிரதேச மக்கள் அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இன்னும் இவர்கள் மத்தியில் காணப்படுகின்ற அறிவில் முறைசார் வழிமுறைகள் மூலம் பெற்ற அறிவுடையவர்கள் மிக அரிதாக காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய மக்களுக்கும் முறைசார் வழிமுறைகள் மூலம் குழந்தை வளர்ப்பு பற்றிய அறிவு வழங்கப்படவேண்டும் என்பதுடன் இதனை ஆய்வு பிரதேச மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர் என்பதும் இவ்வாய்வின் கண்டறிதலாகும்.

**விதந்துறைப்புக்கள்**

- பெற்றோர்களுக்கு இஸ்லாமிய முறைப்படி பிள்ளைகளை வளர்த்தல் தொடர்பாக விழிப்பூட்டல் திட்டங்களை கொடுப்பது அவசியம். அதற்காக வாராந்தம் ஜும்ஆ பிரசங்கங்களில் இஸ்லாமிய சூழலில் பிள்ளை வளர்ப்புப் பற்றி அதிகம் பேசப்பட வேண்டும். இதனால் வளர்க்கப்படும் பிள்ளைகள் ஸாலிஹான முறையில் அமையும். அப்போது அவர்கள் மூலம் இன்னுமொரு குடும்பங்கள் உருவாகும். அக்குடும்பத்தை கட்டியெழுப்புபவர்கள் இஸ்லாமிய சூழலில் அமைவார்கள்.
- பிரதேச அடிப்படையில் துண்டுப் பிரசுரங்கள் கொடுத்து சமூகத்தின் மத்தியில் இஸ்லாமிய குடும்பச் சூழலின் அவசியம் பற்றியும், அது பேணப்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் விளக்கங்களைக் கொடுக்க வேண்டும்.
- இஸ்லாமிய குடும்பச் சூழல், கணவன் - மனைவியின் கடமைகள், பொறுப்புக்கள் என்பன பற்றி பயான் நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பன கட்டம் கட்டமாக ஒவ்வொருவரின் வயது மட்டத்திற்கேற்ப நிகழ்த்தப்பட வேண்டும். மேலும் திருமண வாழ்க்கைத் தொடர்பான இஸ்லாமிய குடும்ப உளவளத்துணை நான்கு பிரிவுகளாக இடம்பெறுதல் வேண்டும். திருமணத்திற்கு முந்தைய பருவ வயதுடன் தொடர்பான உளவளத்துணை, திருமண உளவளத்துணை,குடும்ப பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகு கொடுக்கும் உளவளத்துணை, குழந்தை வளர்ப்பு தொடர்பான உளவளத்துணை ஆகும். இதன் மூலம் பெற்றோர்களை சிறந்த முறையில் வழிகாட்ட முடியும். அத்தோடு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத்துணையைத் தேடும் போது அங்கு முதலில் கட்டாயம் மார்க்கப்பற்று உள்ளவர்களை தெரிவு செய்தல் மிக அவசியம். மார்க்கப்பற்றுள்ளவர்கள் மூலமே குழந்தைகளைஸாலிஹானவர்களாக உருவாக்க முடியும்.
- திருமணம் செய்து வைத்த பிறகும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் குடும்ப வாழ்க்கைப் பற்றியும், அவர்களின் குழந்தை வளர்ப்பு பற்றியும் கண்காணிப்பை மேற்கொள்வது அவசியமாகும்.

**உசாத்துணைகள்**

James.l.hoot, Tunde Szecs, Sameera moosa (2003) What Teachers Of young Children should know about Islam.

பாத்திமா மின்சரா, கே., மஸாஹிர், எஸ்.எம்.எம்.,(2015) முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி வளர்ச்சி: எலமல் பொத பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

Litana borhan. (2004). Teaching Islam: A look inside & Islamic preschool in Malaysia

Abu Thalib, M.M., Dewan, M.H. (2016). Child labour: Islamic perspective. *ESTEEM Journal of Science and Technology 12 (2), 15-30.*

Adibah Sulaiman, Ezad Azaraai Jamsari, Noorsafuan, C.N. (2015). Islamic Environment in child development according to the views of Imam al- Ghazali. *Mediterrranean Journal of Social Sciences vol, 5(29), 33, 2015.*

Amber Haque. (1998). Psychology and religion: Their Relationship and intergration from an Islamic perspective. *American Journal of Islamic Social Sciences 15,97-116.*

Jeffrey, R.D., Rashidul Haque., Beth, D.K., Masud, A. (2016). Small intestine bacterial overgrowth and environment enteropathy in Bangladesi children. Mbio 7(1), e02102-15,297.